**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

Crlmp.1/2025 **Case No.S.C. 134/2017**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | CW-2 |
| Name | : | Mr.M. Sasikala |
| Husband Name | : | Murugan |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2025

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்
அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்சமயம் திருப்பூர் அனுப்பர்பாளையம் காவல் ஆய்வாளராக 8.8.2024 தேதியில் இருந்து பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிரி இந்த நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வந்த பிறகு 20.1.2014 ம் தேதியில் இருந்து ஆஜராகாத காரணத்தால் வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு பிடியாணை நிலுவையில் இருந்தது. எதிரிக்கு ஜாமின் அளித்திநபர் மீதும் நடவடிக்கை எடுத்தும் எதிரி நீதிமன்றத்தில்

ஆஜராகவில்லை. எதிரி தொடர்ந்து தலைமறைவு குற்றவாளியாக இருந்து வருவதால் அவரை proclaimed offender அறிவிக்க கோரி மனுவை தாக்கல் செய்து மனுவியின் அடிப்படையில் எதிரி வசித்து வந்த பகுதிகளில் முறையாக நோட்டீஸ் ஒட்டப்பட்டும், பொதுவான மக்கள் கூடும் 10 இடங்களில் அவர் தேடப்பட்டு வரும் குற்றவாளி என்று நோட்டீஸ் ஒட்டப்பட்டும், நாளேடுகளிலும் விளம்பரம் கொடுக்கப்பட்டு, எதிரி வசித்து வந்த விலாசத்திற்கு உரிய கிராம நிர்வாக அலுவலகரிடம் சான்று பெற்றம் அனைத்து விவரங்களையும் முறையாக பின்பற்றி உள்ளேன். அதை பொறுத்து என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் சொல்லப்பட்டிருக்கும் சங்கதிகள் சரியானவை. அதை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.07.03 11:20:00 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.